# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2011 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ரோஹித அபேகுணவர்தன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, பெப்புருவரி மாதம் 25 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2011 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ரோஹித அபேகுணவர்தன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. – கூட். 15/2009

### ரோஹித அபேகுணவர்தன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"ரோஹித அபேகுணவர்தன மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட கழகத்தோடு தொடர்புபட்ட குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்குமுன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ரோஹித அபேகுணவர்தன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

ரோஹித அபேகுணவர்தன மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் தற்போதைய ''ரோஹித அபேகுணவர்தன மன்றத்தின்'' உறுப்பினர்களாகவுள்ள அத்தகைய ஆட்களும் அல்லது இதனகத்துப்பின்னர் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்படும் அத்தனை எண்ணிக்கையினருமான ஆட்களும் "ரோஹித அபேகுணவர்தன மன்றம்'' என்னும் பெயர்மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமைகொண்ட (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழுவாதல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** (1) கூட்டுத்தாபனம் எந்தப் பொதுத் தத்துவங்களுக்காகத் தாபிக்கப்படுகின்றதோ அந்தப் பொதுத்தத்துவங்கள் பின்வருவனவாகும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) பொதுமக்களினதும் குறிப்பாக களுத்துறை மாவட்டத்தின் மக்களினதும் பங்கேற்பின் ஊடாக சமூக அபிவிருத்தி தொடர்பிலான செயற்பாடுகளை ஊக்குவித்தல் ;

(ஆ) நாட்டில் சமூக, கலாசார, பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலான செயற்பாடுகளில் பங்குபற்றுதல் ;

(இ) மத மற்றும் வேறு விழுமியங்கள் பற்றி விழிப்புணர்வுள்ளவர்களாயிருப்பதற்கு சிறுவர்களைப் பயிற்றுவிப்பதும், அவர்கள் வளர்ந்து நாட்டின் அபிவிருத்தியில் பங்கேற்பதற்குத் தேவையான வளம்பெற்றவர்களாய் இருக்கக்கூடியதாக அவர்களின் திறமைகளை மேம்படுத்துவதற்காக விளையாட்டுச் செயற்பாடுகளில் ஆர்வமொன்றை அவர்களில் ஊக்குவித்தலும் ;

(ஈ) மத நிலையங்களைத் தாபிப்பதிலும் அபிவிருத்தி செய்வதிலும் உதவிபுரிதல் ;

(உ) மக்களின் ஒழுக்கநெறி சார்ந்த மற்றும் கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும் பேணிக்காப்பதற்குமான வழிமுறைகளை மேற்கொள்ளுதல் ;

(ஊ) பொதுமக்களுக்கும் பகிரங்க சேவைக்கும் இடையிலான விரிசலை ஒடுக்குதல் தொடர்பில் பணியாற்றுதல் ;

(எ) அவசியமானவிடத்து வறியவர்கள் சட்ட உதவியும் சட்ட ஆலோசனையும் பெறுவதற்கு உதவியளித்தல் ;

(ஏ) சடுதி அனர்த்தங்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கு உதவுதலும், அவர்களது வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதில் துணைபுரிதலும் ;

(ஐ) உளரீதியாகவும் உடல்ரீதியாகவும் வலு குறைந்த ஆட்களுக்கு உதவிபுரிதல் ; அத்துடன்

(ஒ) பெண்களினதும் சிறுவர்களினதும் உரிமைகளை ஊக்குவித்தல் மற்றும் முன்னெடுத்துச் செல்லுதல் தொடர்பில் பணியாற்றுதல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு இச் சட்டத்தின் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துகையில், அத்தகைய நடைமுறைப்படுத்துகை சாதி, குலம், மதம், மொழி, பால்நிலை, அரசியல் அபிப்பிராயம் என்பவற்றின் அடிப்படையில் பாகுபாடின்றி நிறைவேற்றப்படுவதை கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்கள் உட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் ஊக்குவிப்பதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமாகக் கூடியவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் விடயங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படக் கூடியவாறான காணிகளை அல்லது கட்டிடங்களை கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கு எடுத்தல், நிர்மாணித்தல் அல்லது வேறுவகையில் பெறுதல் ;

(ஆ) காசாக அல்லது பொருளாக மானியங்களை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பரிந்து கேட்டல், பெறுதல் அத்துடன் சேகரித்தல் ;

(இ) வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், தொழிற் படுத்துதல் அத்துடன் மூடிவிடுதல் ;

(ஈ) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணத்தைக் கடனெடுத்தல் அல்லது திரட்டுதல்;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்கு உடனடி யாகத் தேவைப்படாத எவையேனும் நிதியங்களை கூட்டுத்தாபனம் பொருத்தமானதெனக் கருதக் கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் தலைவர் ஒருவரையும் இரண்டு துணைத்தலைவர்களையும், செயலாளர் ஒருவரையும் பொருளாளர் ஒருவரையும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க தெரிவுசெய்யப்பட்ட வேறு பத்து உறுப்பினர்களையும்கொண்ட நிறைவேற்றுப் பேரவையொன்றினால் இச்சட்டத்தினதும் 6 ஆம் பிரிவின்கீழ் கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் ஏதேனும் விதியினதும் ஏற்பாடுகளுக்கு அமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவையானது, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த மன்றத்தின் பேரவை உறுப்பினர்களைக் கொண் டிருத்தல் வேண்டும். அத்தகைய பேரவை கூட்டுத்தாப னத்தின் விதிகளுக்கிணங்க நிறைவேற்றுப் பேரவையொன்று தெரிவு செய்யப்படும்வரை பதவிவகித்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில், சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு, பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடு களுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையான தாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், செலுத் தப்படவேண்டிய உறுப்பாண்மைக் கட்டணங்கள், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளல், விலக்குதல் அல்லது அவர்கள் பதவி விலகுதல் அவர்களைச் சேர்த்துக்கொள்ளல் அத்துடன் விலக்குதல் ;

(ஆ) பேரவையின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் அவர்களின் தத்துவங்களும், கடமைகளும் ;

(இ) பதவிதாங்குநர்களைத் தெரிவுசெய்தல், அவர்களது பதவிக்காலம், அவர்கள் பதவியிலிருந்து விலகுதல், பதவியை வறிதாக்கல், பதவிதாங்குநர்கள் பதவியிலி ருந்து அகற்றப்படுதல், அவர்களின் தத்துவங்கள், நடத்தை அத்துடன் கடமைகள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர் என்போரின் தத்துவங்களும், நடத்தை யும், கடமைகளும் மற்றும் பணிகளும் ;

(உ) பேரவையின் கூட்டங்களைக் கூட்டுதலிலும், நடாத்துதலிலும், அனுசரிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள், அத்தகைய கூட்டங்களுக்கான நேரங்கள், இடங்கள், அறிவித்தல்கள் அத்துடன் நிகழ்ச்சிநிரல் அதற்கான கூட்டநடப்பெண் அவற்றில் அலுவல்களை நிறைவேற்றுதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் நிதி உட்பட அதன் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய் தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவதைப் போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் இப் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந் தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, மரணசாசனக் கொடை, மரணசாசனக் கையளிப்புகள், மானியக்கொடைகள், நன்கொடைகள், கட்டணங்கள் அல்லது உதவுதொகைகள் என்றவகையில் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்தும் தனியாட்களிடமிருந்தும், உறுப்பினர்கள் அல்லாதோரிடமிருந்தும் கிடைக்கப்பெறுகின்ற பணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தால் பெறப்படும் எல்லாப் பணங்களும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும் என்பதுடன், நிறைவேற்றுப்பேரவை தீர்மானிக்கப்படக்கூடிய வாறு கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு ஏதேனும் பொருத்தமான முறையில் முதலீடு செய்யவும்படலாம்.

(3) கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட எல்லா செலவினமும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப் படவுள்ளனவும் மன்றத்திற்குச் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.

**8.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்றுள்ள வாறு மன்றத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தித் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் மன்றத்திற்கு செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாமென்பது.

**9**. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, குத்தகை, நன்கொடை, மரணசாசனக் கையளிப்பு என்றவகையில் அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதாதலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க முழுத் தத்துத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**10**. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் கடன்களையும், பொறுப்புகளையும் நிறைவேற்றும் நோக்கத்திற்கு அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்கு அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு வருமதியாகக்கூடிய வாறான அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணங்களின் தொகைகளை விஞ்சிய உதவுதொகை எதனையும் செலுத்துவதற்குப் பொறுப்புடையவராதலாகாது.

கலைப்பின்மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.

**11**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல், அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துதீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது ; ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அல்லது உடையனவும் அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடை செய்துள்ளதுமான அல்லது தடைசெய்துள்ளவையுமான வேறு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் கணக்குகள்.*

**12.** (1) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் அதன் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டிலும் குறைந்தபட்சம் ஒருதடவையாவது பேரவையால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் அல்லது கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(அ) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் தலைவரினதும் அல்லது ஒரு உப தலைவரினதும் அத்துடன் செயலாளரினதும் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**14.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**15.** இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்